# 4

# ஆத்தி சூடி



அறம் செய்ய விரும்பு.
தருமத்தைச் செய்வதற்கு நீ ஆசைப்படு.
ஆறுவது சினம்.
கோபத்தைத் தணி.
இயல்வது கரவேல்.
கொடுக்க முடிந்த பொருளை
இரப்பவர்களுக்கு இல்லையென்று
மறைக்காதே.
ஈவது விலக்கேல்.
ஒருவருக்கு மற்றொருவர் கொடுப்பதைத் தடுக்காதே.
உடையது விளம்பேல்.
உன்னிடத்து உள்ள பொருளைப் பிறருக்குச் சொல்லாதே.
ஊக்கமது கைவிடேல்.
மனத்துணிவைக் கைவிடாதே.
எண் எழுத்து இகழேல்
கணித நூலையும் இலக்கண நூலையும் இகழ்ந்து பேசாதே.
ஏற்பது இகழ்ச்சி.
பிச்சை எடுப்பது இழிவான செயல்.
ஐயம் இட்டு உண்.
பிச்சை எடுப்பவருக்குக் கொடுத்து உண்பாயாக.
ஒப்புரவு ஒழுகு.
உலக நடைமுறை அறிந்து நட.
ஓதுவது ஒழியேல்.
நூல்களைக் கற்பதை ஒருபோதும் கைவிடாதே.
ஔவியம் பேசேல்.
பொறாமையான வார்த்தைகளைப் பேசாதே.

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ

## அரும்பதங்கள்

| | | | |
|---|---|---|---|
| அறம் | - தருமம் | எண் | - கணிதம் |
| செய்ய | - புரிய | எழுத்து | - மொழி |
| விரும்பு | - ஆசைப்படு | இகழேல் | - தூற்றாதே |
| ஆறுவது | - பொறுப்பது | ஏற்பது | - இரந்து பெறுவது |
| சினம் | - கோபம் | ஐயம் | - பிச்சை |
| இயல்வது | - முடியுமானது | இட்டு | - கொடுத்து |
| கரவேல் | - மறைக்காதே | உண் | - சாப்பிடு |
| ஈவது | - கொடுப்பது | ஒப்புரவு | - உலக நடைமுறை |
| விலக்கேல் | - தடுக்காதே | ஒழுகு | - நட |
| உடையது | - உள்ளது | ஓதுவது | - கற்பது |
| விளம்பேல் | - சொல்லாதே | கைவிடாதே | - விட்டுவிடாதே |
| ஊக்கமது | - துணிவு, முயற்சி | பேசேல் | - பேசாதே |

## கிரகித்தற் பயிற்சி

1. விரும்ப வேண்டியது எது ?
2. ஆற வேண்டியது எது ?
3. இயலுமானதை மறைக்காமல் கொடுக்க வேண்டியது எது ?
4. எதைத் தடுக்கக் கூடாது ?
5. எதைப் பிறரிடம் சொல்லக் கூடாது ?
6. "ஈவது விலக்கேல்" என்பதை விளக்குக.

## செயற்பாடு

### இடைவெளியைப் பூர்த்தி செய்யுங்கள்

1. அறம் செய்ய ...................... 2. ஆறுவது .........................
3. இயல்வது ............................ 4. ................. விலக்கேல்
5. ........................... கைவிடேல்.

### பொருத்தமான சொல்லுடன் இணையுங்கள்

| | |
|---|---|
| 1. உடையது | ஒழுகு |
| 2. எண் எழுத்து | விளம்பேல் |
| 3. ஏற்பது | இட்டுண் |
| 4. ஐயம் | இகழ்ச்சி |
| 5. ஒப்புரவு | இகழேல் |